தமிழ்நாடு அரசு

சுருக்கம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டப்பட வேண்டிய மீனவர் அங்காடிக்கு பதிலாக புதுக்கோட்டை நகராட்சி மூலம் நடத்தப்பட்டு வரும் மீன் அங்காடியை நவீன அங்காடியாக மாற்றி அமைக்கவும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அமைத்திட ஆணையிடப்பட்ட மீனவர் அங்காடியை தக்கலையில் அமைத்திடவும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (மீன்.6) துறை**

அரசாணை நிலை எண். 57 நாள் : 25.02.2003

படிக்க:

1) அ.ஆ. நிலை எண். 102, கா.ப. (ம) மீ.துறை, நாள் 26.6.2000

2) மீன்துறை இயக்குநரின் கடித எண்.ஆர்.1/13796/2000 நாள்.1.11.2000.

3) அ.ஆ. (3டி) எண்.6, கா.ப.(ம) மீ. துறை, நாள் 22.3.02,

4) ஆணையர் (ம) மீன்துறை இயக்குநரின் கடித எண்.13796/ஆர்1/2000, நாள்21.3.2002, 16.8.2002 மற்றும் 27.09.2002.

===

ஆணை:

பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் 10 மீனவர் அங்காடிகள், 9 மீன் உலர் கூடங்கள், மற்றும் 9 மீன் ஏலக்கூடங்கள் ரூ.182.00 இலட்சம் செலவில் கட்டுவதற்கு மத்திய அரசின் நிதியை எதிர்நோக்கி ஆணையிடப்பட்டது. அதன்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள 10 மாவட்டங்களில் அதற்கெதிரே குறிப்பிட்டுள்ள இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைக்கப்பட வேண்டும்:-

| வ.எண். | மாவட்டம் | அங்காடி அமையும் இடம் |
|---|---|---|
| 1 | சென்னை | இராயபுரம் |
| 2 | காஞ்சிபுரம் | தாம்பரம் |
| 3 | கடலூர் | கடலூர் பழைய நகரம் |
| 4 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 5 | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை |
| 6 | புதுக்கோட்டை | அறந்தாங்கி |
| 7 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 8 | திருநெல்வேலி | வள்ளியூர் |
| 9 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 10 | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

2) பார்வை 2-ல் படிக்கப்பட்ட மீன்துறை இயக்குநரின் கடிதத்துடன் அனுப்பப்பட்ட திருத்திய மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரத்திற்கு பதிலாக நீலாங்கரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்திற்குப் பதிலாக நாகர் கோவிலிலும் மீனவர் அங்காடி அமைக்க கோரப்பட்டது. அதன் அடிப்படையில் பார்வை-3ல் படிக்கப்பட்ட அரசாணையில் மீன்துறை

இயக்குநரின் திருத்திய மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட இடங்களில் மீனவர் அங்காடி அமைக்க தக்க விவரங்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைக்க ஆணையிடப்பட்டது.

3. மேலும் இவ்வரசாணையில் மைய அரசின் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 10 மீனவர் அங்காடிகளும், 9 மீன் ஏலக் கூடம், 9 மீன் உலர் கூடங்கள் அமைக்க ரூ.102.44 இலட்சம் அனுமதி அளித்து ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ.2.564 கோடி ஆகும். இதனை மைய அரசும், மாநில அரசும் 75:25 வீதத்தில் பகிர்ந்து கொள்ளும். காஞ்சிபுரம் மாவட்ட திட்ட வளர்ச்சி முகமை இத்திட்டத்தின் தொடர்பு முகமை ஆகும்.

4) கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலுக்குப் பதிலாக தக்கலை எனும் இடத்தில் மீனவர் அங்காடி அமைத்திடவும், இதே போல் இராமநாதபரம் மாவட்டத்தில் பழைய அங்காடி புதுப்பிக்கப்பட்டதால், அதற்கு பதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் மீனவர் அங்காடி அமைத்திடவும் கோரிக்கைகள் பெறப்பட்டன. ஆதே போல் இராமநாதபுரத்தில் மீனவர் அங்காடி அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் இராமநாதபுரத்தில் அமைக்கப்படவுள்ள மீனவர் அங்காடியை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து மீன்துறை இயக்குநரின் குறிப்புரை கோரப்பட்டது. பார்வை 4-ல் படிக்கப்பட்ட ஆணையர் மற்றும் மீன்துறை இயக்குநரின் கடிதத்தில், புதுக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான தற்போது இயங்கி வரும் மீன் அங்காடியினை, நவீன அங்காடியாக மாற்றி அமைத்திடவும், பணி முடித்து அங்காடியின் பராமரிப்பிற்கு மீண்டும் நகராட்சியிடமே ஒப்படைத்திடவும், புதுக்கோட்டை நகராட்சியின் தீர்மானம் பெற்றுள்ளதாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டப்பட வேண்டிய மீனவர் அங்காடிக்கு பதிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில், நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்போது உள்ள மீன் அங்காடியை நவீன அங்காடியாக மாற்றி அமைத்திடும் வகையில் ஆணை வழங்குமாறு வேண்டியுள்ளார். மேலும் தக்கலை மீனவர் அங்காடி அமைக்கத் தகுந்த இடம் என்பதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலுக்குப் பதிலாக தக்கலையில் மீனவர் அங்காடி அமைத்திடவும் ஆணை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

6. மேலே பத்தி 5-உள்ள மீன்துறை இயக்குநரின் செயற்குறிப்பு அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. இராமநாதபுரத்தில் நிறுவப்படவிருந்த மீனவர் அங்காடிக்கு பதிலாக புதுக்கோட்டையில் நகராட்சி மூலம் தற்போது நடத்தப்படும் மீன்அங்காடியை நவீன அங்காடியாக மாற்றி அமைத்து, மீண்டும் நகராட்சியிடமே ஒப்படைக்கவும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அமைத்திட ஆணையிடப்பட்ட மீனவர் அங்காடியை தக்கலை கிராமத்தில் அமைத்திடவும் அரசு ஆணையிடுகிறது.

7. இதுகுறித்து தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. மாதவன் நம்பியார்,
அரசு செயலாளர்

பெறுநர்:

மீன்துறை இயக்குநர், சென்னை-6.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி.
கண்காணிப்பு பொறியாளர், சென்னை மீன்பிடி திட்ட வட்டம், சென்னை-6.
முதன்மை மாநில கணக்குத் துறை தலைவர்

(கணக்குகள் (ம) உரிமைத்தொகை) சென்னை-18.
முதன்மை மாநில கணக்குத் துறை தலைவர்
(கணக்குகள் (ம) உரிமைத்தொகை) சென்னை-18 (பெயரில்)
முதன்மை கணக்குத்துறை தலைவர்(தணிக்கை I) சென்னை-35/சென்னை-35 (பெயரில்)
முதன்மை கணக்குத்துறை தலைவர் (தணிக்கை II)
சென்னை-35/சென்னை-35 (பெயரில்)
மாநில கணக்குத் துறை தலைவர் (உதபி) சென்னை-9
கருவூலக் கணக்குகள் ஆணையாளர், சென்னை-15.
சம்பளக் கணக்குகள் அலுவலர், (தெற்கு) சென்னை-35,
சம்பளக் கணக்குகள் அலுவலர்,(வடக்கு), சென்னை-79.
உதவி சம்பளக் கணக்குகள் அலவலர்,
உதவி சம்பள கணக்குகள் அலவலகம், ரிப்பன் கட்டிடம், சென்னை-3,

நகல்:

திட்டம் (ம) வளர்ச்சித்துறை, சென்னை-9
நிதி (காப(ம)மீ)/வ,செ.பொ. II)துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் செயலகம், சென்னை-9
மாண்புமிகு மீனளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியளர், சென்னை-9
கால்நடை பராமரிப்பு(ம) மீன்வளத்துறை செயலரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9
கால்நடைப் பராமரிப்பு (ம) மீன்வளத்துறையின் அனைத்துப் பிரிவுகள்
உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.